டிஜிட்டல் டெய்லி

# அக்ரி-டாக்டர்

agridoctor.in

agridoctor.in | 15.01.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 172 - Madurai | Online Edition

கல்யாண்
ஜூ வ ல் ல ர் ஸ்

# மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை மத்திய வேளாண் அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தில்லியில் சந்தித்துப் பேசினார்

புது தில்லி, ஜன.14

மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலன் மற்றும் ஊரக மேம்பாட்டுத்துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் நேற்று (12 ஜனவரி 2026) தில்லியில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்துப் பேசினார். சமீபத்திய வாரங்களில், சவுகான் நாடு முழுவதும் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்றதுடன், தில்லியில் விவசாயிகள், விவசாய நிபுணர்கள், சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவு நிறுவனங்கள், கிராமப்புற தொழில்கள் மற்றும் இரு அமைச்சகங்களுடனும் தொடர்புடைய தேசிய அளவிலான நிறுவனங்களின் மூத்த பிரதிநிதிகளுடன் பரந்த அளவிலான கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளார். இந்த விவாதங்களில் இருந்து வெளிவந்த யோசனைகள் மற்றும் பரிந்துரைகள் விவசாயம் மற்றும் ஊரக மேம்பாடு குறித்த விரிவான பரிந்துரைகள் தொகுக்கப்பட்டு, நிதியமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையில், கிராமப்புற இந்தியாவை தன்னிறைவு மற்றும் வளமானதாக மாற்ற மத்திய அரசு தொடர்ந்து பாடுபட்டு வருவதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார். பிரதமரின் திறமையான மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் கீழ், வரவிருக்கும் மத்திய பட்ஜெட் விவசாயிகள் மற்றும் கிராமப்புற சமூகங்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் அமையும் என்று சிவராஜ் சிங் சவுகான் கூறினார்.



## அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

### விடுமுறை அறிவிப்பு

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு 15.1.26 (வியாழக்கிழமை) விடுமுறை.
எனவே எமது அடுத்த மின்னிதழ் 18.1.26 சனிக்கிழமை வெளிவரும்.

- நிர்வாகி

2026-27 நிதியாண்டுக்கான பட்ஜெட், பிரதமரின் 'வளமான விவசாயிகள், அதிகாரம் பெற்ற கிராமங்கள்' என்ற உறுதியை நனவாக்குவதில் ஒரு மைல்கல்லாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

# தென்னையை தாக்கக்கூடிய பூச்சிகளை உயிரியல் மூலமாக கட்டுப்படுத்தும் செல்முறை விளக்கம் அளித்த வேளாண் மாணவர்கள்



ஈரோடு, ஜன.14

ஒவ்வொரு வருடமும் கோவை வேளாண்மை பல்கலை சார்ந்த மாணவர்கள் இறுதி ஆண்டின் முதல் பகுதியாக கிராமத்தில் தங்கி விவசாயிகளுடன் களப்பணி மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில் ஈரோடு மாவட்டம், நம்பியூர் பஞ்சாயத்து உட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தைச் சார்ந்த இறுதி ஆண்டு மாணவர்களின் ஒரு குழுவானது அந்தப் பகுதியில் உள்ள விவசாயிகளை சந்தித்தல் குறைகளை கேட்டல் அவற்றுக்கு தீர்வு காணுதல் போன்ற களப்பணிகளை செய்து கொண்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக ஜனவரி 12 அன்று நம்பியூர் பஞ்சாயத்து உட்பட்ட மொட்டணம் பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கு தென்னையை தாக்கக்கூடிய பூச்சிகளை உயிரியல் மூலமாக கட்டுப்படுத்துவது பற்றி செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக பூச்சிகள் துறையால் உற்பத்தி செய்யக்கூடிய க்ரைஸோபெர்லா என்று அழைக்கக்கூடிய 'பச்சை லேகினி' ஒட்டுண்ணி பற்றியும் அதனைக் கொண்டு எவ்வாறு விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இந்த ஒட்டுண்ணியானது மாவு பூச்சி, வெள்ளை ஈ, அசுவினி பூச்சி மற்றும் இலைப்பேன் போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்த வல்லது. இந்த செயல்முறை விளக்கக் கூட்டத்தில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகளும் ஊர் பொதுமக்களும் பங்கு பெற்று பயன்பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# எண்ணெய் வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்ப பயிற்சி




கடலூர், ஜன.14

கடலூர் மாவட்டம், விருத்தாசலம், வேளாண்மை அறிவியல் நிலையம், சார்பாக எண்ணெய் வித்து பயிர்களில் மேம்படுத்தப்பட்ட விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சி 13.1.26 அன்று வடகரம்பூண்டி (மங்களூர் வட்டாரம்) கிராமத்தில் நடைப்பெற்றது.

இப்பயிற்சியின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் க.நடராஜன், எண்ணெய் வித்து பயிர்களில் சாகுபடி தொழில்நுட்பங்கள், புதிய இரங்கள், விதை நேர்த்தி, உயிர் உரங்கள், நோய் எதிர் உயிர் கொல்லி விதை நேர்த்தி, களை நிர்வாகம், ஜிப்சம் மற்றும் மண் அனைத்தல் பயன்பாடு, வேம்பு பொருட்கள் கொண்டு பூச்சி நோய் பாதுகாப்பு, த.வே.ப.க. பயிர் ஊக்கி நிலக்கடலை ரிச் மற்றும் த.வே.ப.க இணையத்தளம் பயன்பாடு பற்றி விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை, துறையின் விரிவாக்க அலுவலர்கள் மற்றும் ஆத்மா அலுவலர்களுடன் இணைந்து முதல் நிலை செயல் விளக்க திடல்கள் மற்றும் வயல் விழாக்கள் நடத்தி பல்வேறு பயிர்களில் அங்கக வேளாண்மை சான்றளிப்பு மற்றும் விதை உற்பத்தி பற்றிய விழிப்புணர்வு விவசாயிகளுக்கு ஏற்படுத்தப் பட்டது. பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இப்பயிற்சியில் வடகரம்பூண்டி கிராமம், மங்களூர் வட்டாரத்தை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# மதுரை பல்நோக்கு சமூக சேவா சங்கத்தின் (MMSS) சார்பாக சமுத்துவ பொங்கல் விழா

விருதுநகர், ஜன.14

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டாரத்திலுள்ள மதுரை பல்நோக்கு சமூக சேவை சங்கத்தின் (MMSS) அருப்புக்கோட்டை கிளையின் சார்பாக விவசாய மகளிருக்கான சமுத்துவ பொங்கல் விழா நேற்று அருட்தந்தை செயலாளர் கபீரியேல் தலைமையிலும் உதவி செயலர் அருட் தந்தை ராஜன் முன்னிலையில் 'சமுத்துவ பொங்கல்' விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் செயலர் பேசுகையில் தைத் திருநாள் அனைத்து மதத்தினரும் கொண்டாடும் தமிழர் திருநாளாகும் என்றார். பாடுபட்டு உழைத்த உழைப்பு மகசூலாக வீடு வந்து சேரும் அறுவடை நாள் எனக் கூறினார். உதவி செயலர் இராஜன் பேசுகையில், தை பிறந்தால் வழி பிறக்கும். தை மகள் நம்முடைய அனைவரின் வாழ்வில் வளம் சேர இந்த நன்னாளை சிறப்பாக சமத்துவ சகோதாரத்துவமாக கொண்டாடி மகிழ்வோம் என்றார்.

விழாவில் கலந்த கொண்ட வேளாண் ஆலோசகர் சந்திர சேகரன் கூறுகையில், இந்த பண்டிகை நாடு முழுவதும் சிறப் பாக கொண்டாடப்படுகிறது. உழைக்கும் வர்க்கத்தினர் இயற்கைக்கு நன்றி சொல்லும் நாள், பொங்கல் தித்திப்பதை போல அனைவரின் வாழ்வும் வளம் பெற இயற்கையை வேண்டுவோம் என்றார்.

இந்நிகழ்வில் ஆலடிபட்டி, காளையார் கரிசல்குளம் அன்புநகர் வேல்முருகன் காலனி கல்குறிச்சி பாரதிநகர் சேர்ந்த மகளிர் குழு உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்டார ஒருங்கிணைப்பாளர் பொருட் செல்வி சிறப்பாக செய்திருந்தார். தையல் ஆசிரியை ஞானம் நன்றி கூறினார். அனைவரும் பொங்கல் வழங்கப்பட்டது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**







**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.

இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

# நன்றி

தொடர்புக்கு
*+91 80563 05483*
*+91 9344811812*

# நிலம் கையகம் செய்தல் பணியை ஆய்வு செய்த வேளாண்மை இணை இயக்குநர்



அரியலூர், ஜன.14

அரியலூர் மாவட்டம், ஜெயங் கொண்டம் வட்டாரத்தில் வேளாண்மை இணை இயக்குநர் உலகம்மை முருகக்கனி, ஆய்வு மேற்கொண்டார்.

அரியலூர் மாவட்டம், உடையார் பாளையம் வட்டத்தில் குருவாலப்பர்கோவில், இளையபெருமாள் நல்லூர், முத்துசேர்வாமடம் மற்றும் குண்டவெளி (கி) ஆகிய கிராமங் களில் திருச்சி – சிதம்பரம் தேசிய நெடுஞ்சாலை–81 – கங்கை கொண்டசோழபுரம் புறவழிச்சாலை அமைக்கும் பணி சம்மந்தமாக நிலம் கையகம் செய்தல் குறித்து அரியலூர் தாசில்தார் எல்.கோவிந்த ராஜ் உடன் வேளாண்மை இணை இயக்குநர் ஆய்வு மேற்கொண்டார். மேற்கண்ட வருவாய் கிராமங்களில் கட்டுமானம், மரங்கள், பயிர் கள், தோட்டப் பயிர்கள் ஆகியவை பற்றி ஆய்வு மேற் கொண்டார். வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) மா.மகேந்திரவர்மன் உடனிருந்தனர்.

# இலை வண்ண அட்டையின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.14

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாரத்தில் 06/01/26 அன்று முத்துக் காளிப்பட்டி கிராமத்தில் கிராமப்புற மற்றும் விவசாயப்பணி அனுபவம் என்ற வேளாண் பயிற்சியின் கீழ் துறையூரில் உள்ள இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகளான அபி.E, அபிநயா ஸ்ரீ.S, அனிசா.P, அனுஜா.R, அர்சத் ஃபர்ஹானா.S, அஸ்மிதா.D, அட்சயா.K, பியூலா ஏஞ்சல்.M, சித்ரா தேவி.R, தாரணி. S (குழு எண் 1) முத்துக்காளிப்பட்டியைச் சேர்ந்த விவசாயி துரைசாமியின் நெற்பயிரை மேற்பார்வையிட்டனர். மேலும் நெற்பயிருக்கு உரமிட இலை வண்ண அட்டையின் (leaf colour chart) பயன்களை பற்றி கூறினர். இலை வண்ண அட்டையை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினர்.

# அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்


Rithvik Pipe

## 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# படகு ஓட்டுநர் உரிமச் சான்றிதழ் பயிற்சி




இராமநாதபுரம், ஜன.14

நான் முதல்வன் வெற்றி நிச்சயம் திட்டத்தில் கீழ் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக் கழகத்தின் ஓர் அங்க மான இராமநாதபுரத்தில் செயல்பட்டு வரும் மீன்வளத் தொழில் காப்பகம் மற்றும் தொழில்சார் பயிற்சி இயக்குனரகம் நடத்தும் “படகு ஓட்டுநர் உரிமச் சான்றிதழ் பயிற்சி” என்ற ஒரு வார கால உள்வளாகப் பயிற்சியின் துவக்க விழாவானது 05.01.26 முதல் 12.01.26 வரை நடைபெற்றது.

பயிற்சியின் ஒருங்கிணைப்பாளர் ச.மாரியப்பன், உதவிப் பேராசிரியர் வரவேற்புரை மற்றும் பயிற்சி விளக்க உரை நிகழ்த்தினார். இப்பயிற்சியில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த 16 மீனவர்கள் பயிற்சியில் கலந்து கொண்டார்கள். மீன்வள ஆய்வாளர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, இராமநாதபுரம், சாஹுல் ஹமீது, நிகழ்ச்சியின் சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்டார். அவர் தமது சிறப்புரையில் மீனவர்களுக்கு கடர்சார் எஞ்சின் பராமரித்தல் மற்றும் பழுது நீக்குதல் பயிற்சியின் மூலம் ஏற்படும் நன்மைகளை பற்றி எடுத்துரைத்தார். மேலும், மீனவர் களின் மேம்பாட்டிற்கு மாநில அரசுகள் கொண்டு வந்த திட்டங்களை விரிவாக எடுத்துரைத்தார். மேலும், அவர் தமது சிறப்புரையில் மீனவர்கள் படகு ஓட்டுநர் உரிமம் பெற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். கடலில் இருக்கும் போது படகு என்ஜினில் பழுது ஏற்பட்டால் மீனவர்களே பழுது நீக்குவதற்கு இப்பயிற்சி மிகவும் உதவியாக இருக்கும் எனவும் கூறினார்.

பங்கு பெற்ற 16 மீனவர்களுக்கு படகு ஓட்டுநர் உரிமமானது மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையால் வழங்கப்பட்டது. மேலும், இந்த ஒரு வார கால உள்வளாகப் பயிற்சியின் போது கடல்சார் மின்னனுச் சாதனங்களைக் கையாளுதல், உலகளாவிய

இருப்பிடம் காட்டி (ஜி.பி.எஸ்) மற்றும் மீன்கண்டு பிடிப்பான்கள் செயல்முறை விளக்கம், மாலுமிக்கலை வரைபடங்கள், மாலுமிக் கலை ஒலிச்சமிக்கைகள்மற்றும் கடற்பயண விதிகள், ஆழ்கடல் மாலுமிக்கலை செயல்முறை விளக்கம், கடைசல் பனிப்பட்டறை இயந்திர செயல்முறை விளக்கம், கடலில் முதலுதவி மற்றும் கடலில் மீனவர் பாதுகாப்பு, ஆழ்கடல் வானிலை, தீயணைப்பு முறைகள் மற்றும் செயல்விளக்கம், கடல் எஞ்சின் பராமரிப்பு செயல்முறை விளக்கம், பாதுகாக்கப்பட்ட நீர்வாழ் உயிரினங்கள் ஆகிய தலைப்பு களில் பயிற்சிகள் மீனவர்களுக்கு பயன்தரும் வகையில் வழங்கப்பட்டது.

## அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



# அமோக விளைச்சலுக்கு விதைப் பரிசோதனை செய்வீர்!

இலாபகரமான விவசாயத்திற்கு அடிப்படை தரமான விதையாகும். விதையின் தரம் என்பது அதன் சுத்தத் தன்மை, முளைப்புத்திறன், ஈரப்பதம் மற்றும் பிற ரகக் கலவன் இன்றி இருத்தல் போன்றவற்றைக் குறிக்கும். நல்ல முளைப்புத்திறன் உள்ள விதைகளே சீராக வளர்ந்து சிறப்பான மகசூல் தரும்.

இந்திய விதை தரத்தில் நிர்ணயிக்கப்பட்ட முளைப்புத்திறன் நெல்லுக்கு 80%, மக்காசோளம் 90%, சோளம், கம்பு மற்றும் சிறுதானிய பயிர்களுக்கு 75%, பயறு வகைகளுக்கு 75%, நிலக்கடலை 70%, எள் 80%, இரகப் பருத்திக்கு 65%, வீரிய ஒட்டு இரக பருத்திக்கு 75%, வெண்டைக்கு 65%, கத்தரி 70%, மிளகாய் 60% மற்றும் தக்காளி 70% இருந்தால் மட்டுமே போதிய பயிர் எண்ணிக்கை பராமரிக்கப்பட்டு அதிக மகசூல் கிடைக்கும்.

எனவே விவசாயிகள் தாங்கள் உபயோகிக்கும் விதையின் தரத்தை அறிந்து கொள்ள விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், வேளாண்மை இணை இயக்குநர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் அரசு விதைப் பரிசோதனை நிலையத்தில் விதை மாதிரியினை கொடுத்து ரூ.80/- கட்டணம் செலுத்தினால், அவ்விதை பரிசோதனை செய்யப்பட்டு விதையின் தரம் குறித்த முடிவறிக்கை வழங்கப்படும் என விதைப் பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி, வேளாண்மை அலுவலர்கள் இ.ஜானகி மற்றும் பா.சாய்லெட்சுமி சரண்யா ஆகியோர் தெரிவித்தனர்.



# அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



# தை பிறந்தால் வழி பிறக்கும் - ஒரு பார்வை



பொதுவாக கிராமப்புறங்களில் இந்த பழமொழி அடிக்கடி செல்லுவதுண்டு. உழவர்களின் உழைப்பிற்கு ஊதியம் கிடைப்பது தை மாதத்தில் தான். ஆடி பட்டம் தேடி விதைத்து மார்கழி மாதம் வரை இரவு பகலாக உழைத்து பாடுபட்டு வளர்த்த பயிரின் அறுவடையை தை முதல் நாளில் காப்பு கட்டி அறுவடை செய்யப்படும். அதனால் தான் என்னவோ, தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லுவார்கள்.

தை மாதம் நெல் அறுவடைக்கு பின்னர் கஷ்டங்கள் நீங்கி கடன் தீர்த்து வீட்டில் திருமணம் போன்ற மங்கள காரியங்கள் நடப்பதற்கும் தை மாத வழி ஏற்படுத்துவதால், தை பிறந்தால் உழவர்களின் வழி பிறக்கும் என்பதை தான் நினைவு படுத்துகிறது.

**தைப் பொங்கல்?**

சூரியன் ஒவ்வொரு ராசியிலும் ஒவ்வொரு மாதமும் சஞ்சரிக் கிறார். அதில் மகர ராசிக்குள் அவர் நுழையும் நாளை தைத் திருநாள் என்று அழைக்கிறோம்.

மார்கழி மாதத்தின் கடைசி நாளான போகியன்று பழைய பொருட்களை தீயிட்டுக் கொளுத்துவதும் வீட்டின் தூய்மைக்கு வேண்டாத பழமையை விலக்கி புதுமையை வரவேற்கும் விதமாக பொங்கல் அமைந்துள்ளது. அதனால் வாழ்வில் முன்னேற்றத்திற்கு வழிவகை உண்டாகுவது இயற்கை. அதனால் தான் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற சொல் வழக்கு ஏற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

**தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதற்கு இன்ன பிற அர்த்தமும் உள்ளது. அவை என்னென்ன என்பதை பார்ப்போம்.?**

முன்பெல்லாம் கிராமப்புறங்களில் சாலை வசதிகள் கிடையாது. அடுத்த ஊருக்கு செல்ல வரப்பு தான் பாதை. தற்போதைய வரப்பு போல அந்த காலத்தில் இல்லை. ஒரு 3 படி பாதை. அந்த வழியாக தான் இரவிலும் கூட நடந்து போவாங்க. அறுவடை செய்யப்பட்ட நெல் மணிகளை கட்டு கட்டாக கட்டி தலைச்சுமையாக சுமந்து தான் போவாங்க.

நாற்று நடும் போது வரப்பு சுத்தமாக தான் இருக்கும். பயிர் வளர வளர களைச்செடிகள் நெல் கதிர்கள் வரப்பை சூழ்ந்து புதர் போல மூடி இருக்கும். இரவில் நடக்க பயமாக தான் இருக்கும். தை மாதத்தில் அறுவடை செய்யப்படுவதால் தான் நிலமும் பாதையும் சுத்தமாகும் என்பதால் தை பிறந்தால் வழி பிறக்கும் என்று சொல்லப்படுகிறது.

தமிழர்களின் தலையான பண்டிகை தான் தைத் திருநாள், தமிழர் திருநாளாகும். தை பிறந்தாலே வாழ்வில் வசந்தம் மலரும் என்பதை உழவர்கள் நம்புகிறார்கள், தை மகளை வரவேற்க காத்திருக்கிறார்கள், அவர்களுடன் சென்று நாமும் தை மகளை வரவேற்போம். அகமும் புறமும் மலர தை மகளை இருகரம் கூப்பி வரவேற்போம்!!!

தை பிறக்கட்டும், வழி பிறக்கட்டும்!

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# பூச்சி மேலாண்மைக்கான சூரிய ஒளி பூச்சி பொறி குறித்த செயல்விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



சிவகங்கை, ஜன.14

சிவகங்கை மாவட்டம், எஸ்.புதூர் வட்டாரத்திற்குட்பட்ட தர்மபட்டி கிராமத்தில், 13.01.26 அன்று ஊரக வேளாண்மை அனுபவப் பயிற்சி (RAWE) திட்டத்தின் கீழ் பூச்சி மேலாண்மைக்கான சூரிய ஒளி பூச்சி பொறி (Solar Light Trap) குறித்த செயல்விளக்கம் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை செட்டிநாடு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் (Agricultural College and Research Institute, Chettinad) இறுதியாண்டு மாணவர்கள் ஒருங் கிணைந்து நடத்தினர். பயிர்களில் சேதம் விளைவிக்கும் இரவுப் பூச்சிகளை ஈர்த்து பிடிப்பதன் மூலம், ரசாயன பூச்சிக் கொல்லிகள் இன்றி சுற்றுச்சூழல் நட்பு முறையில் பூச்சி கட்டுப்பாட்டை மேற்கொள்ளும் விதம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சூரிய ஒளி பூச்சி பொறி அமைக்கும் முறை, செயல்பாடு, பயன்பாட்டு நேரம் மற்றும் அதன் பயன்கள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இந்தக் காட்சியின் மூலம் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்று பயனுள்ள தகவல்களைப் பெற்றனர். இந்நிகழ்ச்சி நிலைத்த வேளாண்மை மற்றும் செலவுக் குறைந்த பூச்சி மேலாண்மைக்கு வழிவகுக்கும் என மாணவர்கள் தெரிவித்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் தேசிய தொழில் முனைவோர் தினவிழா 2026

கோயம்புத்தூர், ஜன.14

பாரத பிரதமர் நரேந்திர மோடியின் ஆலோசனைப்படி தேசிய துளிர் நிறுவன வாரம் ஜனவரி 09 முதல் 16ம் தேதி வரை ஒவ்வொரு வருடமும் கொண்டாடப்படுகிறது. தொழில் முனைவோர்களின் பங்களிப்பு மற்றும் சாதனைகளை கௌரவிக்கும் நோக்கத்தோடு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொழில்நுட்ப வணிக காப்பகத்தில் 09.01.26ம் தேதி துளிர் நிறுவன தினம் கொண்டாடப்பட்டது.



வேளாண் வணிக மேம்பாட்டு இயக்கக இயக்குனர் முனைவர் E.சோமசுந்தரம், வரவேற்புரை ஆற்றினார் அவரது உரையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள தொழில் நுட்ப வணிக காப்பகம் வேளாண் சார்ந்த துளிர் நிறுவனங்களுக்கு தொழில்நுட்பம், உள்கட்டமைப்பு மற்றும் நிதியுதவி ஊக்குவிப்பதில் முன்னோடியாக திகழ்கிறது. இதனால் வேளாண் துறையில் புதிய தொழில்நுட்பங்கள் சார்ந்த தொழில்கள் வளர்ச்சியடைவதோடு வேளாண் பட்டதாரிகள் வேலை வாய்ப்புகளை உருவாக்குபவர்களாகவும் மேம்படுவார்கள் என்று கூறினார்.

A.V.ஞானசம்பந்தம், மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி, தொழில் வணிக காப்பகத்தின் மூலம்

நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் மற்றும் முனைப்புகள் குறித்து விளக்கினார். மேலும் 2011ம் ஆண்டு தொழில் வணிக காப்பகம் நிறுவப்பட்டதிலிருந்து பெற்றுள்ள முக்கியமான மைல் கற்கள் மற்றும் சாதனைகளையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்ச்சியில் துவக்க உரை ஆற்றிய இணை வேளாண் இயக்குனர், T.தமிழ்ச்செல்வி வேளாண் தொழில் முனைவோருக்கு தேவையான மத்திய, மாநில அரசின் ஊக்குவிக்கும் நலத்திட்டங்களை ஒரே குடையின் கீழ் செயல்படுத்தும் நிறுவனமாக இப்பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப வணிக காப்பகம் திகழ்கிறது என்றார்.

மேலும் இக்காப்பகம் புதியதொழில் தொடங்குவதற்குகான ஆர்வத்துடன் வருபவர்களுக்கு தேவையான தொழில்நுட்பம், சந்தைப்படுத்துதல், தேவையான சான்றிதழ், தரக்கட்டுப்பாடு, நிதி ஆலோசனைகள் ஆகிய உதவிகளை அளித்து 660க்கும் மேற்பட்ட வேளாண் தொழில் முனைவோர்களை இத்தொழில் நுட்ப வணிக காப்பகம் உருவாக்கியுள்ளது.

இந்நிகழ்ச்சியில் கோவை மாவட்ட தொழில் மையத்தின் துணை இயக்குனர், ஸ்ரீ ராஜேஸ்வரி, நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி மேலாளர் C.திருமலாராவ், S.ரம்யா, மேலாளர், பாரத ஸ்டேட் வங்கி, ஹில்டா, (AO) வேளாண் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் வணிகத் துறை, அபிராமி நாகராஜன், மேலாளர், யூனியன் பேங்க் ஆப் இந்தியா, மற்றும் M.சாமிநாதன், தலைவர், (FIEO) ஆகியோர் கலந்து கொண்டு மத்திய, மாநில அரசின் தொழில்முனைவோருக்கான திட்டங்களை பற்றி உரையாற்றினார்கள். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இயக்குனர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். தொழில்வணிக காப்பகத்தின் மேலாண்மை இயக்குனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி A.V.ஞானசம்பந்தம் நன்றியுரை ஆற்றினர்.



# ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை மற்றும் இரசாயன முறைகள் பற்றிய பயிற்சியளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



செங்கல்பட்டு, ஜன.14

செங்கல்பட்டு மாவட்டம், பாபுராயன் பேட்டையில் இயங்கி வரும் எஸ்.ஆர்.எம் வேளாண்மை அறிவியல் கல்லூரியை சேர்ந்த தோட்டக்கலை துறை தர்ஸ்டோன் குழு மாணவர்கள் 11 பேர் (விக்னேஷ், ஜெயசூர்யா, தமிழ்மணி, நித்தீஷ் குமார், ரூபன் ராஜ், ஜீவானந்தம், ஹரிஹரன், சுதர்சன் சக்தி, செல்வவதி, சாம் சுந்தர், யோகேஸ்வரன்) ஆகியோர் கிராம தோட்டக்கலை பணி அனுபவத் திட்டத்தையொட்டி சித்தாமூர் வட்டம், மேட்டு கொளத்தூர் கிராமம், விவசாயிகளுக்கு சிறப்பு பயிற்சி முகாம் டிசம்பர் 26யில் அளித்தனர்.

இதில் பேராசிரியர் கண்ணன், காய்கறி பயிர் சாகுபடி தொழில் நுட்பம் மற்றும் தர்பூசணி சாகுபடிக்கு உகந்த மண், காலநிலை, இரகம், உரம் மேலாண்மை, வளர்ச்சி ஊக்கிகள் தெளித்தல், களை மேலாண்மை, அறுவடை மற்றும் சந்தைப் படுத்துதல் பற்றியும், பேராசிரியர் முருகன் காய்கறிப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை அங்கங்கள் (உழவியல் முறை, ஒழுங்கு நடைமுறைகள், மரபு சார்ந்த நடைமுறைகள், உயிரியல் முறைகள்) பற்றியும், பேராசிரியர் ரகேஸ்வரி செல்வராஜ் ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை அங்கங்களில் உயிரியல் மற்றும் இரசாயன முறைகள் பற்றியும் பயிற்சி அளித்தனர்.

இதில் ஏராளமான ஊர் மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு சந்தேகங்களை கேட்டறிந்து பயன் பெற்றார். மேலும் ஒருங் கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் நோய் மேலாண்மையின் முக்கியத்துவத்தை அறிந்து கொண்டனர். மேலும் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை மூலம் ரசாயன உரங்களின் அளவை குறைத்தும், மண் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபடுதல் குறித்து எஸ்.ஆர்.எம். தோட்டக்கலை நான்காம் ஆண்டு தர் ஸ்டோன் குழு மாணவர்கள் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

# ட்ரோன் தொழில்நுட்பம் விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்

திருச்சி, ஜன.14

ட்ரோன் (Drone Technology) என்பது மனிதர் இல்லாமல் இயக்கப்படும் வானூர்தி தொழில்நுட்பமாகும். வேளாண்மையில் ட்ரோன்கள் பயிர் கண்காணிப்பு, உரம் மற்றும் பூச்சிக்கொல்லி தெளிப்பு, நில அளவீடு போன்ற பணிகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன. இது நேரம், செலவு மற்றும் மனித உழைப்பை குறைத்து,




விவசாய செயல்திறனை அதிகரிக்கிறது. மேலும் அரசின் மானிய உதவிகளும் ட்ரோன் பயன்பாட்டிற்கு வழங்கப்படுகின்றன.

**ட்ரோன் என்றால் என்ன?**

ட்ரோன் என்பது தொலைநிலையிலிருந்து (Remote Control) அல்லது தானியங்கி முறையில் (Automatic) இயக்கப்படும் மனிதர் இல்லா வானூர்தியாகும். இது கேமரா, சென்சார்கள் மற்றும் தெளிப்பு அமைப்புகளுடன் இணைக்கப்பட்டு, விவசாய நிலங்களில் பல்வேறு பணிகளை துல்லியமாக செய்ய உதவுகிறது.

**வேளாண் ட்ரோனின் முக்கிய பகுதிகள்**

**மூல கட்டமைப்பு (Frame)**

ட்ரோனின் அனைத்து பகுதிகளையும் தாங்கும் அடிப்படை அமைப்பு.

**மோட்டார்கள் மற்றும் புரொப்பெல்லர்கள்**

ட்ரோனை வானில் பறக்கச் செய்து, சமநிலையுடன் இயக்க உதவுகின்றன.

**பேட்டரி**

ட்ரோனுக்கு தேவையான மின்சாரத்தை வழங்குகிறது.

**தெளிப்பு அமைப்பு**

உரம் மற்றும் பூச்சிக்கொல்லிகளை சம அளவில் பயிர்களுக்கு தெளிக்க பயன்படுகிறது.

**கேமரா மற்றும் சென்சார்கள்**

பயிர் வளர்ச்சி, நோய் தாக்கம், ஈரப்பதம் போன்றவற்றை கண்காணிக்க உதவுகின்றன.

**நன்மைகள்**

**நேரம் சேமிப்பு**

பெரிய நிலப்பரப்பை குறுகிய நேரத்தில் கண்காணித்து தெளிக்க முடியும்.

**செலவு குறைவு**

மனித உழைப்பு மற்றும் இயந்திரச் செலவுகள் குறைகின்றன.

**துல்லியமான தெளிப்பு**

தேவையான அளவில் மட்டுமே உரம் மற்றும் மருந்துகள் தெளிக்கப்படுவதால் விரயம் குறைகிறது.

**பயிர் பாதுகாப்பு**

விவசாயிகள் நேரடியாக வயலில் இறங்காமல் பணிகளை செய்ய முடிவதால் பாதுகாப்பு அதிகரிக்கிறது.

**உயர் மகசூல்**

பயிர்களுக்கு சரியான நேரத்தில் சரியான மேலாண்மை கிடைப்பதால் மகசூல் அதிகரிக்கிறது.

**குறைபாடுகள்**

**அதிக ஆரம்ப செலவு**

ட்ரோன் வாங்குவதற்கான ஆரம்ப முதலீடு அதிகமாக உள்ளது.

**பயிற்சி தேவை**

ட்ரோனை இயக்க தொழில்நுட்ப அறிவும் பயிற்சியும் அவசியம்.

**பேட்டரி வரம்பு**

ஒரு முறை சார்ஜில் குறுகிய நேரம் மட்டுமே இயங்கும்.

**வானிலை பாதிப்பு**

அதிக காற்று மற்றும் மழை காலங்களில் ட்ரோன் பயன்பாடு பாதிக்கப்படலாம்.

**இந்திய அரசு மானியம்**

வேளாண் ட்ரோன் பயன்பாட்டை ஊக்குவிக்கும் வகையில், மத்திய மற்றும் மாநில அரசுகள் மானியங்கள் வழங்குகின்றன. ட்ரோன் வாங்குவதற்கான செலவில் 50% முதல் 75% வரை மானியம் வழங்கப்படுகிறது. குழுக்கள் மற்றும் விவசாய சங்கங்களுக்கு கூடுதல் நிதி உதவியும் வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு, **ஜே.மைக்ளின் ஜோஷி, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் B.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, ஆர்த்தீ, உதவிப் பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், ச.பூர்ணிமா, உதவிப் பேராசிரியர் மற்றும் குழு மேற்பார்வையாளர், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna8789@gmail.com, தொலைபேசி எண் : 99446 41459** **ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.**



# பெரோமோன் பொறி பயன்பாடு மற்றும் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு தோட்டக்கலை மாணவிகள் விளக்கம்



பெரம்பலூர், ஜன.14

பெரம்பலூர் மாவட்டம், மேத்தாலில் உள்ள விவசாயிகளுக்கு பெரோமோன் பொறி பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை பற்றி திருச்சி மகளிர் தோட்டக் கலைக் கல்லூரி மாணவிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பெரோமோன் பொறி என்பது பயிர்களை தாக்கும் தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படும் சுற்றுச்சூழல் நட்பு கருவியாகும். பெண் பூச்சிகள் இயற்கையாக வெளியிடும் வாசனைப் பொருளைப் போல செயற்கையாக தயாரிக்கப்பட்ட பெரோமோனை பயன்படுத்தி ஆண் பூச்சிகளை கவர்ந்து வலையில் பிடிக்கிறது. இதன் மூலம் பூச்சிகளின் இனப்பெருக்கம் குறைந்து, பயிர் சேதம் கட்டுப்படுத்தப்படுகிறது. பெரோமோன் பொறி பயிர்களில் பூச்சிகளின் எண்ணிக்கையை கண்காணிக்கவும், சரியான நேரத்தில் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் எடுக்கவும் உதவுகிறது. இரசாயன பூச்சிக்கொல்லிகள் பயன்பாட்டை குறைப்பதால் மண், நீர் மற்றும் மனித ஆரோக்கியம் பாதுகாக்கப்படுகிறது. ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (ஞூஊணனி) முறையில் பெரோமோன் பொறி ஒரு முக்கியமான, செலவுக் குறைந்த மற்றும் பாதுகாப்பான தொழில்நுட்பமாகும்.

இந்நிகழ்வு மேத்தாலில் உள்ள விவசாயிகளுக்கு தோட்டத்தில் ஊரக தோட்டக்கலை பணி அனுபவம் திட்டத்தின் கீழ் நான்காம் ஆண்டு மாணவிகள் ஆர்யா பிஜு, கௌரி.செ, ஜெசிகா, ஜுவா.சொ, கீர்த்தனா.ச, மோனிக்கா.து, மோத்திகா.ரா, யாழினி.செ ஆகியோர் பெரோமோன் பொறி பயன்பாடு மற்றும் முக்கியத்துவத்தை பற்றி விவசாயிகளுக்கு விரிவாக விளக்கம் அளித்தனர்.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# தேனீ வளர்ப்பு மற்றும் தேனை சந்தைப்படுத்துதல் பற்றியறிந்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.14

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவர்கள் தினேஷ்.அ, ராம்குமார்.சா.சு.பூ, ரித்திஸ்.கு.சி, ரூசோ அருள்ராஜ்.அ.மெ, சந்தோஷ்.ப, சிவா.ரா, சௌந்தர்யன்.வே, வைரமுத்து.ப, விகாஷ், வினோத்குமார்.வீ, விஸ்வநாதன்.சே ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் மண்ணச்சநல்லூரில் தங்கி தொடர்ச்சியாக விவசாயிகளை சந்தித்து விவசாயிகள் பின்பற்றும் பயிர் உற்பத்தி முறைகள் பற்றி அறிந்து வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக சமயபுரம் அருகில் உள்ள தச்சங்குறிச்சியில் விவசாயி ஜோசப்பின் பண்ணைக்குச் சென்றனர். அவர் மாணவர்களுக்கு விவசாயத்தில் தேனீக்களின் தாக்கம், தேனீ வளர்ப்பு, தேன் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு, தேனிலிருந்து செய்யும் மதிப்புக்கூட்டுப் பொருட்கள் பற்றியும் அதை சந்தைப்படுத்துதல் பற்றியும் விளக்கினார். மேலும் தேன் கூட்டிலிருந்து கிடைக்கும் தேன் மெழுகு, மகரந்தம் போன்ற இதர பொருட்களின் முக்கியத்துவம் மற்றும் அதிலிருந்து கிடைக்கும் கூடுதல் வருமானம் பற்றியும் கூறினார்.

# கால்நடை மருத்துவமனையை பார்வையிட்டு பராமரிப்பு குறித்தறிந்த வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், ஜன.14

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டாரத்தில் 05/01/26 அன்று கிராமத்தில் கிராமப்புற மற்றும் விவசாயப் பணி அனுபவம் என்ற வேளாண் பயிற்சியின் கீழ் துறையூரில் உள்ள இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதி ஆண்டு மாணவிகள் 10 பேர் குழு எண் 1 மாணவிகள் இராசிபுரம் (ஆண்டகலூர் கேட்) கால்நடை மருத்துவமனையை பார்வையிட்டனர்.

மாணவிகள் கால்நடை மருத்துவமனையின் செயல்பாடு களையும் மற்றும் கால்நடை பராமரிப்பு பற்றியும் தெரிந்துக் கொண்டனர். மேலும் கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய் பற்றியும் தடுப்பூசி பற்றியும் தெரிந்துக் கொண்டனர். கோழி பராமரிப்பு, கால்நடையை தாக்கும் நோய்கள் மற்றும் மூலிகை மருத்துவம் பற்றியும் தெரிந்துக் கொண்டனர்.

## உழவர் சந்தையின் நோக்கம் மற்றும் செயல்பாடுகளை அறிந்து கொண்ட வேளாண் கல்லூரி மாணவிகள்




திருச்சி, ஜன.14

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஹரிநந்தனா, பெனாசீர், ரிசா, சாருமதி, செரின் செண்பகம், சிவப்பிரியா, சினேகவள்ளி, சுகந்தி, சுஜா வர்ஷினி, சுவேதா, சுரேகா, வர்சா, வசந்த ஸ்ரீ, யாஷிகா, யோகவர்ஷினி யுவ ஸ்ரீ.தி, யுவஸ்ரீ.ந ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் கிராமங் களில் தங்கி உழவர் பெருமக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர் களுடைய சாகுபடி அனுபவ முறைகள் பற்றி அறிந்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி மாவட்டம், லால்குடியில் உள்ள உழவர் சந்தைக்கு சென்றனர். அங்கு வேளாண் அலுவலர் லாவண்யா, உழவர் சந்தையின் செயல்பாடுகள் மற்றும் அரசின் திட்டங்கள் பற்றி கூறினார். அவர் இடைத்தரகர்களை நீக்கி விவசாயி களுக்கு நியாயமான விலை மற்றும் நுகர்வோருக்கு தரமான பொருட்களை வழங்குவதே உழவர் சந்தையின் முக்கிய நோக்கம் என்று விளக்கினார். மேலும் சுழற்சி முறையில் கடைகளை ஒதுக்குதல், உழவர் சந்தை அடையாள அட்டை பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் விளக்கினார்.

## நுண் உரம் தயாரிக்கும் முறையைப் பற்றி விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவர்கள்

திருச்சி, ஜன.14

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப்



பணி அனுபவத்தில், துவாக்குடியில் நுண் உரம் தயாரிக்கும் முறையைப் பற்றி அங்கு உள்ள நெற்பயிர் இட்டு வரும் கால்நடைகள் வளர்க்கும் விவசாயிக்கு எடுத்துரைத்தனர். இந்த உரத்தை வீட்டின் காய்கறி கழிவுகள், மக்கக்கூடிய (உலர்ந்த) குப்பைகளை பள்ளம் தோண்டி அதில் போட்டு, மாட்டுச்சான கரைசலைத் தெளித்து வாரத்திற்கு ஒருமுறை அதை கிளறிவிட்டு தயாரிக்கப்படும் உரமாகும். உரம் தயாரானதை உரத்தின் அளவு குறைந்ததை வைத்தும், நிறம் பழுப்பு நிறமாக மாறி, மணல் வாசம் வரும் நிலையைக் கொண்டு அறியலாம்.

